# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 43 — 1973 ජනවාරි 19 වැනි සිකුරාදා — 1973.01.19

43 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு இலாகாவின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 63 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் விறவும் .. .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| குலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. | 64 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 65 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*தரைப்படைத் தலைமை நிலையம்*

இலங்கைப் பயிலுநர் சிறப்பணியின் உத்தியோகத்தர்கள், பயிலுநர்கள் ஆகியோருக்கான ஆண்டுப் பயிற்சி முகாம் தியத்தலாவையில் கீழ்க்காணப்படும் நாட்களில் நடைபெறும். இத்தினங்களில் எல்லாவிதமான உணவுப்பொருட்களையும் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ச மாவத்தையில் உள்ள தரைப்படைத் தலைமை நிலையத்தில், கேள்விச்சபைத் தலைவரால் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் :—

01.3.1973 தொடக்கம் 05.3.1973
05.3.1973 தொடக்கம் 09.3.1973
10.3.1973 தொடக்கம் 14.3.1973
14.3.1973 தொடக்கம் 18.3.1973
19.3.1973 தொடக்கம் 23.3.1973
23.3.1973 தொடக்கம் 27.3.1973
28.3.1973 தொடக்கம் 01.4.1973
01.4.1973 தொடக்கம் 05.4.1973
06.4.1973 தொடக்கம் 10.4.1973
16.4.1973 தொடக்கம் 30.4.1973
01.8.1973 தொடக்கம் 10.8.1973
13.8.1973 தொடக்கம் 22.8.1973
25.8.1973 தொடக்கம் 03.9.1973
06.9.1973 தொடக்கம் 15.9.1973
18.9.1973 தொடக்கம் 27.9.1973

மேலே குறிப்பிட்ட விநியோகத்திற்கு திருப்பிக் கொடுக்கப்படும் கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) தரைப்படைத் தலைமை நிலையத்தின், இலங்கை இராணுவப் பிரதம கணக்காளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விநியோகங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் திகதி முற்பகல் 10 மணிவரை இலங்கைப் பயிலுநர் சிறப்பணியின் கொமாண்டன்ற் இடமிருந்து கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது என்ற அத்தாட்சிப்பத்திரத்தை காட்டியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் எல்லா விபரங்களுக்கும் கொமாண்டன்ற், தலைமை நிலையம் இலங்கைப் பயிலுநர் சிறப்பணி, தரைப்படைத் தலைமை நிலையம், பாலதக்ச மாவத்தை, கொழும்பு என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேஜர்-ஜெனரால்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமை நிலையம்,
பாலதக்ச மாவத்தை,
த. பெ. இல. 553,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ந் திகதி.

1-700—19.01.73 ம் திகதிய வர்த்தமானி இல. 43

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும், நேரத்திற்கும் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு
(பிரதேசப் பிரிவு)

கட்டும் பலகைகள் விநியோகத்திற்கான கேள்விகள்

பெட்டிகள் தயாரிப்பதற்கு ஏற்றதான 1" × ½" பலகைகளை விநியோகிப்பதற்கு கேள்விகளை 1973 ம் ஆண்டு பெப்பிருவரி மாதம் 7 ந் திகதி மு. ப. 10.00 மணி வரையும் இலங்கையர்களிடமிருந்தும், இலங்கையர்களைக் கொண்ட வியாபார நிறுவனங்களிடமிருந்தும் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் (பிரதேசப் பிரிவு) கேள்விச் சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. இவ்வமைச்சலுவலகத்தில் அல்லது இவ்வமைச்சின் பிரதேச அலுவலகத்தில் ரூபா 50 கேள்விப் பத்திர வைப்புப் பணத்தை கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, 1973 பெப்பிருவரி மாதம் 6 ந் திகதி பி. ப. 2.00 மணி வரைக்கும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்திலிருந்து பெறத்தக்க படிவங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

3. மேலும் தகவல்கள் தேவைப்படின் அவற்றை கொழும்பு 1 ல் உள்ள பழைய செயலக கட்டிடத்திலுள்ள நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சில் (3 ம் மாடி அறை 356) பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. சீ. பி. த. எஸ். விக்கிரமநாயக,
காரியதரிசிக்காக.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ம் தேதி.

1-663—19.01.73 ம் திகதிய வர்த்தமானி இல. 43

---

சிலாபம் மாநில பாடசாலைகளுக்கு "கெயர்" பால், விசுகோத்து ஏற்றிக் கொடுத்தல்—1973

1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெறும் கீழ்க் காணும் சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் (இரட்டைப் பிரதியில்) சிலாபம் கல்வியலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து கீழே குறிப்பிடுவனவற்றில் அடைக்கப்பட்ட விசுக்கோத்துக்களை சிலாபம் மாநிலப் பாடசாலைகளுக்கு ஏற்றிக் கொடுத்தல்.

"கிட்டத்தட்ட 20 இரு. விசுக்கோத்தைக் கொண்ட நீள் சதுரக் காட்போட் பெட்டிகள்"

கீழே குறிப்பிட்ட இடங்களுக்காகத் தனித்தனிக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாகோ விநியோக நிலையத்திலிருந்து :

குருணாகல் மாவட்டம்

1. நிக்கவரட்டியா கல்வி வட்டாரம்.

மாதம்பை விநியோக நிலையத்திலிருந்து :

சிலாபம், குருணாகல் (ஒருபகுதி) மாவட்டங்கள்

2. சிலாபம், நாத்தாண்டிய, வென்னப்புவ, உடுபத்தாவை, பிங்கிரிய கல்வி வட்டாரங்கள்.

புத்தளம் விநியோக நிலையத்திலிருந்து :

புத்தளம், குருணாகல் (ஒரு பகுதி) மாவட்டங்கள்

3. ஆனமடு, புத்தளம் கல்வி வட்டாரங்கள்.

2. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் சிலாபப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரங்களில் விண்ணப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி வரையும் விநியோகிக்கப்படும். சிலாபம் கல்வியலுவலகத்திலோ அல்லது எந்தக் கச்சேரியிலோ ரூ. 100 கட்டுப் பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தால்தான் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திரத்திற்கான கட்டுப்பணம் கட்டுவதினின்று விலக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நேரம் கடந்த பின்னர் அவை திறக்கப்படும். பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விப் பத்திரக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

4. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படு முன்னர் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் சிலாபம் மாநிலக் கல்விப் பணிப்பாளர் திருப்தி கொள்ளும் வகையில் ரூ. 10,000 பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளரென அந்த இடத்தின் காரியாதிகாரியிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட ஒருபெறுமதிக் கடிதமும், முதலாம் பந்தியில் சொல்லப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் தனது பெயரில் பதியப்பட்ட ஒவ்வொரு லொறியாகுதல் அவருக்குண்டென்றும், அவை நடப்பு வருட லைசன்ஸ் கொண்டிருக்கின்றன என்றும் பத்திரங்கள் மூலம் அத்தாட்சிப் படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன மேற்கண்ட சேவைகளுக்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். எனினும் கேள்விப் பத்திரம் வழங்கு முன் இச்சங்கங்கள் முறையே கூட்டுறவுச் சங்க ஆணையாளர், கிராம அபிவிருத்திச் சங்க அதிபர் அல்லது தொழில் ஆணையாளர் ஆகியவர்களில் உரியவர்களிடமிருந்து இச் சேவைகளைச் செய்வதற்கு குறிப்பிட்ட ஒரு சங்கம் தகுதியுள்ளது என்றும் முதலாம் பந்தியில் சொல்லப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் சங்கத்தின் பெயரில் சொந்தமான ஒவ்வொரு லொறியாகுதல் உண்டென்றும் அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். லொறியின் பதிவுப் பத்திரமும் நடப்பு வருட லைசன்சும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேற் கூறப்பட்ட தேவையான விடயங்களைப் பூர்த்தியாக்கத் தவறும் விண்ணப்பதாரருக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன்பாக அவசியமெனச் சிலாபம் கல்விப் பணிப்பாளருக்குத் தோன்றினால் சேவையொன்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட லொறிகள் தேவையெனக் கேட்க உரிமையுண்டு.

5. கேள்விப் பத்திரங்களில் ஏதாவது ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது முற்றாக நிராகரித்துவிடவோ சபைத் தலைவருக்கு உரிமையுண்டு. கேள்விப் பத்திரகாரர்கள் தமது கேள்விகளை கேள்விப்பத்திரங்கள் முடிவடைந்து 6 கிழமைகளுக்குச் செல்லுபடியாக வைத்திருத்தல் வேண்டும்.

6. இது சம்பந்தமாக மேலும் விபரங்களுக்கு சிலாபம் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

றெ. ஜெ. த. அரியரத்தினம்,
கல்விப் பணிப்பாளருக்காக,
சிலாப மாநிலம்.

கல்வித் திணைக்களம்,
சிலாபம்,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 4 ந உ.

1-589—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

## ஆயுவிற்பனையும், குத்தகை விற்பனையும்

வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை—1.3.73 தொடக்கம் 30.9.73 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணைகளில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.3.73 தொடக்கம் 30.9.73 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்து வரும் பொது விதிகளுக்கமையவும், 31.10.72 ல் பிரசுரிக்கப்பட்ட 31/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

2. கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1973 என்று குறிப்பிட்டு, மாசி மாதம் 7 ந் திகதி கீழே காட்டப்பட்டிருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும், எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர்—

(அ) நேர்முகத்தில் சமூகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணி இருக்கின்றதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25 விகிதத்திற்குக் குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது ;

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது வவுனியாக் கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாகக் கச்சேரிப் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர், தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. கேள்விப்பத்திரங்கள் பெற்றவர்கள், குத்தகை விற்பனையில் பங்கு பற்றத்தவறின் தங்கள் வைப்புப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு கேள்விப்பத்திரத்தைத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

8. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

10. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காகத் தெரிவுசெய்திருக்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

11. மேற்கொண்டு விபரங்கள் அறிய விரும்பின் வவுனியாக் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள் விற்பனை—1.3.73—30.9.73

| இலக்கமும் இடமும் | தவறணைகளின் உள்ளூர்ப் பகுதி | விற்பனைத் திகதி | நேரம் |
|---|---|---|---|
| 2—வலயான்மடம் .. | வலயான்மடம் கிராம எல்லைக்குள் | 7.2.73 .. | காலை 11.00 |
| 6—அலம்பில் .. | அலம்பில் கிராம எல்லைக்குள் | ௸ .. | காலை 11.30 |

எஸ். சிவஞானம்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

வவுனியாக் கச்சேரி,
1973 ம் ௵ சனவரி ௴ 9 ந் ௳.

1–752—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

---

# நானாவித அறிவித்தல்கள்

**பாடசாலை உபயோகத்திற்கெனக் கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களினதும் உபபாடப் புத்தகங்களினதும் பூரண அட்டவணை**

1971 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபையால் பாடசாலை உபயோகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட (தமிழ்) பாடப் புத்தகங்களினதும், உப–பாடப் புத்தகங்களினதும் பூரண அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2. பாடசாலைகளின் உபயோகத்துக்குப் புத்தகங்களைத் தெரிவுசெய்தல், "1.1.1973 தொடக்கம் அரசினர் பாடசாலைகளின் கட்டாய உபயோகத்துக்கான புத்தகங்கள்" பற்றி கல்வி அமைச்சால் 1972 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆந் திகதி விடுக்கப்பட்ட பா. ச. 6/233 ம் இலக்கம் கொண்ட 279 ஆம் இலக்கச் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமையும்.

3. பாடசாலை உபயோகத்திற்குத் தற்பொழுது செல்லுபடியான பாடப் புத்தகங்களும், உப பாடப் புத்தகங்களுமே இவ்வட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்கவும். அங்கீகாரங்களின் செல்லுபடிக் காலக் முடிவடைந்தவைகளும் இச்சபையால் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப்படாதவைகளுமான பாடப்புத்தகங்களும் உப பாடப்புத்தகங்களும் நீக்கப்பட்டுள்ளன.

4. சுலபமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பாடப்புத்தகங்கள் வெவ்வேறு பாடங்களின் கீழும், அங்கீகாரக் காலவெல்லையை வகுத்துக் காட்டும் அட்டவணையின் கீழும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் பாடசாலை உபயோகத்திற்கு மேலும் செல்லுபடியாக வேண்டுமெனின் ஒவ்வொரு புத்தகமும் அங்கீகாரக் காலவெல்லை முடியும்பொழுது மீண்டும் இச்சபையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

5. கல்விப் பகுதியாலும், கல்விநூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள் தவிர்ந்தவையும் இச்சபையால் சிபார்சு செய்யப்படாதவையுமான புத்தகங்களை பாடசாலை உபயோகத்திற்கு விதித்தல் குற்றமாகும்.

6. கல்விப் பகுதியாலும் கல்விநூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள், குறிப்புரைகளுடன் கூடிய இலக்கிய நூல்களின் புதுப் பதிப்புகள், சொற்தொகுதிகள், அகராதிகள், கோட்டுப்படங்கள், வரைப்படங்கள் ஆகியன இச்சபையின் அங்கீகாரத்தினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளன.

7. கல்விப் பகுதியாலும் கல்விநூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் இவ்வட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

8. இவ்வட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள வரிசைக் கிரமம் புத்தகங்களின் சிறப்பு ஒழுங்கையோ முக்கியத்துவத்தையோ குறிப்பதல்ல.

கே. எஸ். பளிஹக்கார,
செயலாளர்,
கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1972 ம் ௵ டிசெம்பர் ௴ 4 ந் ௳.

தமிழ் பாடநூல்

**கணக்குப் பதிவியல்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.1972 தொடக்கம் 31.12.1974 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | கணக்கியற் சுருக்கம் .. .. | க.பொ.த(சா.த.) | வே. அழகேசன் .. | சரோஜா நூல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம் |

**பாடநூல்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.1971 தொடக்கம் 31.12.1973 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | *பொற்காலப் புவியியல் .. .. | 6 | .. எம். ஆர். யோசேப், ஏ. மாணிக்கவாசகர் .. | கலைவாணி புத்தக நிலையம், 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |
| 2. | புவி இயல் .. .. | 8 | .. வி. கந்தவனம் பீ. ஏ. .. | வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், சுன்னாகம் |

**உப பாடம்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.1971 தொடக்கம் 31.12.1973 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | பொற்காலப் புவியியல் .. .. | 7 | .. எம். ஆர். யோசேப் யே. யே. அற்புதராசா .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

**வரலாறு—பாடநூல்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.1971 தொடக்கம் 31.12.1973 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | *நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பகுதி II | | .. எஸ். ஏ. பேக்மன், ஜி. சி. எமண்டிஸ் .. | கொழும்பு அப்போதிக்கரிஸ், 84, பிரதான வீதி, கொழும்பு—11 |

**வாணிபம்—உபபாடம்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.1971 தொடக்கம் 31.12.1973 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | நடைமுறை வணிகம் .. .. | க.பொ.த (சா.த.) | ந. ஞானேந்திரன் .. | எஸ். வல்லிபுரம், எழுதுமட்டுவாள், எஸ். அப்புத்துரை, கொக்குவில் |

**பொது விஞ்ஞானம்—பாடநூல்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | பொது விஞ்ஞானபோதினி .. | 6 | .. எம். பரமானந்தம், எஸ். எஸ். இரத்தினசிங்கம் .. | வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 2. | பொது விஞ்ஞானபோதினி .. | 7 | .. எம். பரமானந்தம், எஸ். எஸ். இரத்தினசிங்கம் .. | வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 3. | புதுமுறைப் பொது விஞ்ஞானம் .. | 6 | .. செல்வி இன்பம் சின்னத்தம்பி .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 4. | பொது விஞ்ஞானம் 3 ம் புத்தகம் .. | 8 | .. ம. சி. பிரான்சிஸ் .. | சமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

**சமயம்—இஸ்லாம்**

அங்கீகாரக் காலவெல்லை 1.1.71 தொடக்கம் 31.12.73 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | சாந்தி மார்க்கம் .. | 2 | .. மௌலவி எம். பலீல் .. | எம். ஆர். முகிலார், 197, காலி வீதி, கொழும்பு 3 |
| 2. | ஷை .. .. | 3 | .. ஷை .. | ஷை |
| 3. | ஷை .. .. | 4 | .. ஷை .. | ஷை |
| 4. | ஷை .. .. | 5 | .. ஷை .. | ஷை |
| 5. | ஷை .. .. | க.பொ.த(சா.த.) | ஷை .. | ஷை |
| 6. | ஷை .. .. | 2 | .. ஷை .. | ஷை |

*அடுத்த பதிப்பு திருத்தி அமைக்கப்பட வேண்டும்

1–577—19.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 43

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** | 5.1.73 | வெள்ளி | 27.12.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி | 3.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி | 10.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி | 17.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | 2.2.73 | வெள்ளி | 24.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி | 31.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் | 7.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி | 14.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| **மாச்சு** | 2.3.73 | வெள்ளி | 21.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 28.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 7.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 14.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 21.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஏப்பிறில்** | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.**

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.